Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 298/2022 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சூர்யா, இரண்டாம்நிலைக் காவலர் |
| Father's Name | – | ஆறுமுகம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th November 2025

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆழியார் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக் காவலராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 05.03.2021ம் தேதி உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கிருஷ்ணசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய கு.எண்.43/2021 சட்டபிரிவுகள் 294(பி), 323, 326, 332, 353, 506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.3** மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் வாதியின் புகார் வாக்குமூலத்தை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் 06.03.2021ம் தேதி 07.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜோதி பாசு மற்றும் மனமோகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆகும்.

பின்னர் 06.03.2021ம் தேதி 08.45 மணிக்கு புளியங்கண்டி வாய்க்கால் மேடு SS-VII டிரான்ஸ்பார்மர் அருகில் வைத்து வாதி அடையாளம் காட்ட சம்பவயிடத்திலிருந்து ஒழுங்கற்ற வடிவமற்ற கல் ஒன்றையும், வாதி கிருஷ்ணசாமியின் கடவாய் பல் ஒன்றையும் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7** ஆகும். அந்த ஒழுங்கற்ற கல் **அ.சா.பொ.1** மற்றும் கடவாய் பல் **அ.சா.பொ.2** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட கிருஷ்ணசாமி என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முருகபூபதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த காயச்சான்றிதழை பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.8** ஆகும்.

பின்னர் எதிரியை கைது செய்யும் பொருட்டு புளியங்கண்டி, அங்கலக்குறிச்சி, என்.எம்.சுங்கம் ஆகிய இடங்களில் தேடி விசாரித்துக் கொண்டிருந்தபோது, கரட்டுமடம் புங்கமுத்தூர் பிரிவு அருகில் வழக்கின் எதிரி நின்றுக் கொண்டிருப்பதாக தகவலாளி மூலம் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து அங்கு சென்று தகவலாளி அடையாளம் காட்ட 19.00 மணிக்கு எதிரியை கைது செய்து, 19.45 மணிக்கு நிலையம் கொணர்ந்து திரேக பரிசோதனை

செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும். பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 323, 326, 332, 353, 506(2) இ.த.ச. லிருந்து 294(பி), 323, 325, 332, 353, 506(2) இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றாலும், உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், கைப்பற்றப்பட்ட பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.